# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-3 Date : 17.12.2024

Case No. : O.S. 494/2019 Nationality : Indian

Name : Religion :

முத்துசட்டநாதன்(உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம்) Age : 45

Father's/Husband's Name :

Village :

Taluk :

<u>வா.சா.3</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள சாசாஆ 5 மற்றும் சாசாஆ 6 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் என்னவென்றால் சாசாஆ 5 ஆவணத்தில் சர்வே எண்.204/4 என்ற சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. சாசாஆ 6 ஆவணத்தில் சர்வே எண்.204/2 மற்றும் 204/3 ஆகிய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. சாசாஆ 5 ஆவணம் பெந்தக கடன் ஆவணம் ஆகும். சாசாஆ 6 ஆவணம் கிரய ஆவணம் ஆகும். மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதில் கண்ட சொத்துக்கள் தற்போது யாருடைய அனுபவித்தில் இருந்து வருகிறது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் தற்போது என்ன சாகுபடி யாரால் செய்யப்பட்டு வருகிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் தற்போது வரை உரிமை மாற்றங்கள் செய்யப்படவில்லை என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம்

காட்டப்படும் பிசாஆ 1 ஆவணத்தில் 11 வது பிரதிவாதியாக திருவிடைமருதூர் சார்பதிவாளர் தரப்பினராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பிசாஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்து விவரத்தில் சர்வே எண்.204/4 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கண்ட 9 வது இன சொத்தில் சர்வே எண்கள்204/2 மற்றும் 204/3 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.18 10:22:21 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.